மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.02/2020
இ.ம.எண்.282/2017
அ.வ.எண்.60/2017

1. ராஜாத்திமணி
2. கே.ஆர்.மணி
(1ம்வாதியின் பவர் ஏஜெண்ட்) ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

சார் ஆட்சியர்,
சார் ஆட்சியர் அலுவலகம்,
மேட்டூர் அணை–1. ...எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/6ம்பிரதிவாதி

இம்மனு கடந்த 15.09.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.பி.சித்தன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், எதிர்மனுதாரர் தரப்பு எழுத்துமூலமான வாதுரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் இ.ம.எண்.282/2017 கடந்த 27.08.2019ல் முடிக்கப்பட்ட மனுவை மீண்டும் திறக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

மனுதாரர்கள் இ.ம.எண்.282/2017ல் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு பெற்றிருந்தனர். மேற்படி வழக்கு விசாரணைக்கு தயாரானதால் 27.08.2019ல் மேற்படி மனுவை முடித்து வைப்பதாகவும், தேவை ஏற்படின் மனு

தாக்கல் செய்யும் உரிமை அளித்து மேற்படி மனு முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனு முடித்து வைத்ததை பிரதிவாதிகள் சாதகமாக கொண்டு எதிர்மனுதாரரை தூண்டிவிட்டதன் அடிப்படையில் 26.08.2020, 28.08.2020 ஆகிய தேதிகளில் 2 ம்மனுதாரரை நேரில் விசாரணைக்கு ஆஜராக சொல்லி அறிவிப்பு அனுப்பியுள்ளனர். 2 ம்மனுதாரர் ஆஜராகி ஏற்கனவே 19.02.2019 ல் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் சிவில் வழக்கு நிலுவையில் இருந்ததால் 12.03.2018 ம் தேதியிட்ட கூடுதல் தலைமை செயலாளர், நில நிர்வாக ஆணையாளர் ஆகியவர்களின் சுற்றறிக்கைகளை கொடுத்த போது 2 ம்மனுதாரர் பெற்ற இடைக்கால தடை உத்தரவு தள்ளுபடியாகிவிட்டது என கூறி அதனை ஏற்க மறுத்து இ.ம.எண்.282/2017 மனு மீதான நடவடிக்கை நகலை 14 நாட்களில் கொடுக்க நீதிமன்றத்தில் உத்தரவு செய்துள்ளார். மேலும் தாவாவில் விளம்புகை பரிகாரம் கோரி தாவா நிலுவையில் உள்ள சூழலில் எதிர்மனுதாரர் தனியே விசாரணை செய்ய அதிகாரமும் இல்லை. எனவே இ.ம.எண்.282/2017 கடந்த 27.08.2019 ல் முடிக்கப்பட்ட மனுவை மீண்டும் திறக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

தமிழ்நாடு பட்டா பாஸ்புத்தகம் சட்டம் மற்றும் வருவாய்துறை நிலை ஆணையத்தின் கீழ் பட்டா மாறுதல் குறித்த மேல்முறையீடு சம்மந்தமாக எதிர்மனுதாரருக்குள்ள அழைப்பாணை அனுப்புதல், விசாரணைக்கு ஆஜராக கோருதல், அதன் மீது உத்தரவு பிறப்பித்தல் போன்ற அதிகாரங்களை தடை செய்யும் எண்ணத்துடன் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. செங்கோட கவுண்டர் வகையறா பட்டா மாறுதல் உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அது சட்டத்திற்கு உட்பட்ட செயலாகும். அதில் ஆஜராக கூடாது என்பதற்காக தான் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இ.ம.எண்.282/2017 என்ற மனு 30 நாட்களுக்குள் ரீ–ஓப்பன் செய்யாத காரணத்தினாலும், அ.வ.எண்.49/2010 ன் வழக்கு சொத்து தான் இவ்வழக்கின் சொத்து என்பதை மறைத்தும், மேற்படி வழக்கில் தாவாசொத்து குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் இந்த எதிர்மனுதாரர் அலுவலக

நில அளவையருடன் தாவா சொத்தை அளப்பதை தடைசெய்யும் எண்ணத்துடன் அ.வ.எண்.60/2017 என்ற வழக்கை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதாலும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. எவ்வித முகாந்திரமும் இன்றி இம்மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.282/2017 ல் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு மனுதாரர்கள் பெற்றிருந்தனர் எனவும், மேற்படி வழக்கு விசாரணைக்கு தயாரானதால் 27.08.2019 ல் மேற்படி மனுவை முடித்து வைப்பதாகவும், தேவை ஏற்படின் மனு தாக்கல் செய்யும் உரிமை அளித்து மேற்படி மனு முடிக்கப்பட்டுள்ளது எனவும், இந்நிலையில் மனு முடித்து வைத்ததை பிரதிவாதிகள் சாதகமாக கொண்டு எதிர்மனுதாரரை தூண்டிவிட்டதன் அடிப்படையில் 26.08.2020, 28.08.2020 ஆகிய தேதிகளில் 2 ம்மனுதாரரை நேரில் விசாரணைக்கு ஆஜராக சொல்லி அறிவிப்பு அனுப்பியுள்ளனர் எனவும், 2 ம்மனுதாரர் ஆஜராகி ஏற்கனவே 19.02.2019 ல் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் சிவில் வழக்கு நிலுவையில் இருந்ததால் 12.03.2018 ம் தேதியிட்ட கூடுதல் தலைமை செயலாளர், நில நிர்வாக ஆணையாளர் ஆகியவர்களின் சுற்றறிக்கைகளை கொடுத்த போது 2 ம்மனுதாரர் பெற்ற இடைக்கால தடை உத்தரவு தள்ளுபடியாகிவிட்டது என கூறி அதனை ஏற்க மறுத்து இ.ம.எண்.282/2017 மனு மீதான நடவடிக்கை நகலை 14 நாட்களில் கொடுக்க

நீதிமன்றத்தில் உத்தரவு செய்துள்ளார் எனவும், மேலும் தாவாவில் விளம்புகை பரிகாரம் கோரி தாவா நிலுவையில் உள்ள சூழலில் எதிர்மனுதாரர் தனியே விசாரணை செய்ய அதிகாரம் இல்லை எனவும், எனவே இ.ம.எண்.282/2017 கடந்த 27.08.2019 ல் முடிக்கப்பட்ட மனுவை மீண்டும் திறக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் தமிழ்நாடு பட்டா பாஸ்புத்தகம் சட்டம் மற்றும் வருவாய்துறை நிலை ஆணையத்தின் கீழ் பட்டா மாறுதல் குறித்த மேல்முறையீடு சம்மந்தமாக எதிர்மனுதாரருக்குள்ள அழைப்பாணை அனுப்புதல், விசாரணைக்கு ஆஜராக கோருதல், அதன் மீது உத்தரவு பிறப்பித்தல் போன்ற அதிகாரங்களை தடை செய்யும் எண்ணத்துடன் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத் –தக்கதல்ல எனவும், செங்கோட கவுண்டர் வகையறா பட்டா மாறுதல் உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது எனவும், ஆகவே அது சட்டத்திற்கு உட்பட்ட செயல் எனவும், அதில் ஆஜராக கூடாது என்பதற்காக தான் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இ.ம.எண்.282/2017 என்ற மனு 30 நாட்களுக்குள் ரீ–ஓப்பன் செய்யாத காரணத்தினாலும், அ.வ.எண்.49/2010 ன் வழக்கு சொத்து தான் இவ்வழக்கின் சொத்து என்பதை மறைத்தும், மேற்படி வழக்கில் தாவாசொத்து குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் இந்த எதிர்மனுதாரர் அலுவலக நில அளவையருடன் தாவா சொத்தை அளப்பதை தடைசெய்யும் எண்ணத்துடன் அ.வ.எண்.60/2017 என்ற வழக்கை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதாலும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல எனவும், எவ்வித முகாந்திரமும் இன்றி இம்மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) மனுதாரர்கள் வழக்கறிஞர் மனுவில் கூறியுள்ள காரணங்களுக்காக மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் எதிருரையில்

கூறியுள்ள காரணங்களுக்காகவும், கீழ்கண்ட முன்தீர்ப்பின் படிக்கும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

CRP (PD) No.1781 of 2012 & M.P.No.1 of 2012

Anitha Vs. Mohan and Others

> "In respect of patta, the Government has passed order in G.O.Ms.No.409 Revenue (SS/1(2)) Department dated 02.07.2008 in which after the order of the District Revenue Officer, the party who suffered orders of the Revenue official ought to have challenge the orders by way of Civil Suit."

(iv) மேற்கண்ட அரசாணைப்படிக்கு மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவால் பாதிக்கப்பட்டதற்கு பின்னிட்டு தான் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என மாண்புமிகு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது தெரியவருகிறது. ஆனால் தற்போது அசல் வழக்கு குறித்து இம்மனுவில் தீர்மானிக்க முடியாது என்பதால் மேற்கண்ட முன்தீர்ப்பு இம்மனுவிற்கு பொருந்தாது என தீர்மானிக்கப்படுகிறது.

(v) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இ.ம.எண்.282/2017 இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு கடந்த 27.08.2019 ல் மனுதாரர் தேவைப்பட்டால் புதிய மனுவினை தாக்கல் செய்யலாம் என அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி மனு முடிக்கப்பட்டுள்ளது (closed) என உத்தரவிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. தற்போது மனுதாரர்கள் மேற்படி இ.ம.எண்.282/2017 யை திறப்பதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இ.ம.எண்.282/2017 தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவில்லை என்பதால் மேற்படி மனுவை தகுதியின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/−திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:− இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:− இல்லை

ஒப்பம்/−திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.